வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- நாராயணசாமி

தேதி 18.11.2024 நேரம் மாலை 6.10 மணி

<u>தலைப்புச் செய்திகள்</u>

- உலக அளவிலான பிணக்குகளால், தெற்குலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியை தீர்க்க, ஜி-20 நாடுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என, பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார்.
- மகராஷ்டிர மாநிலத்தில் ஒரே கட்டமாகவும், ஜார்கண்டில், 2 ஆவது மற்றும் இறுதிக் கட்டமாகவும் நாளை நடைபெற உள்ள, சட்டமன்ற தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன.
- முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி பிறந்த நாளான இன்று புதுச்சேரியில், துணை நிலை ஆளுநர், முதலமைச்சர் உள்ளிட்டோர், இந்திராகாந்தி சிலைக்கு, அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.
- 55 ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா, கோவாவில் நாளை தொடங்கி, வரும் 28 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

<u>மோடி மாநாடு (18)</u>

பிரேசில் நாட்டின் ரியோ-டி-ஜெனிரோ நகரில் நடைபெறும் ஜி-20 உச்சி மாநாட்டின், 2 ஆம் நாளான இன்று, பிரதமர் திரு நரேந்திர மோடி, நீடித்த வளர்ச்சியும்-எரிசக்தி மாற்றமும் என்னும் அமர்வில் உரையாற்றுகிறார். பிரேசில், சிலி, ஆஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகளின் அரசுத் தலைவர்களை இரு தரப்பு ரீதியில் அவர் சந்திக்கிறார்.

மாநாட்டின் முதல் நாள் நிகழ்வுகளில் பிரதமர் பேசுகையில், தெற்குலக நாடுகளின் உணவு, எரிபொருள் மற்றும் உரத் தேவைகளை நிறைவேற்றுவதில், உலக அளவிலான பிணக்குகளால் எதிர்மறை தாக்கம்

ஏற்பட்டுள்ளதால், இதை சரிப்படுத்த ஜி-20 நாடுகள் முன்னுரிமை அளிக்க வேண்டும் என வலியுறுத்தினார். வறுமை மற்றும் பசிப் பிணியை போக்குவதற்கான உலக கூட்டணி, 80 நாடுகளின் ஆதரவுடன் இம்மாநாட்டில் தொடக்கி வைக்கப்பட்டது. மாநாட்டின் நிகழ்வுகளுக்கு இடையே, இங்கிலாந்து, நார்வே, இந்தோனேஷியா, இத்தாலி, பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளின் அரசுத் தலைவர்களுடன் பிரதமர் திரு நரேந்திர மோடி இரு தரப்பு கூட்டங்களை நடத்தினார். வர்த்தகம், பாதுகாப்பு, சுற்றுலா, உள்ளிட்ட துறைகளிலும் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட அதிநவீன துறைகளிலும் இருதரப்பு ஒத்துழைப்பை மறு உறுதி செய்யும் வகையில் இந்த சந்திப்புகள் அமைந்திருந்தன.

*மோடி சாகர்* (9)

சுதந்திரமான, பாதுகாப்பான, திறந்த நிலை கடல்சார் கட்டமைப்பு குறித்த இந்தியாவின் தொலை நோக்கு பார்வை, தற்போது உலகெங்கிலும் பிரதிபலித்து வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். சாகர் மந்தன் என்ற பெயரில் கடல் சார் துறை பற்றிய உரையாடல் நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்து நடத்துவதில், மத்திய கப்பல் துறை அமைச்சகத்தின் முயற்சிகளை பாராட்டி இன்று பிரதமர் வெளியிட்டுள்ள செய்தியில் இவ்வாறு கூறியுள்ளார். சாகர் மந்தன் உரையாடலின் வெற்றியினால் மனித குலத்தின் வளமான எதிர்காலத்திற்கான கூட்டாண்மை குறித்து கருத்தொற்றுமை உருவாக ஏதுவாகும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

ஜல்சக்தி (10)

உலக கழிப்பறை தினமான இன்று, மத்திய ஜல்சக்தி அமைச்சகம், நமது கழிப்பறை-நமது கவுரவம் என்ற பெயரில், 3 வார கால பிரச்சார இயக்கம் ஒன்றை தொடக்கி உள்ளது. நாடு முழுவதும் துப்புரவு வசதிகளை மேம்படுத்தி, கழிப்பறைகளின் பயன்பாடு மற்றும் பராமரிப்பு தொடர்பான மக்களின் பழக்கத்தில் மாற்றம் கொண்டு வரும் நோக்கத்துடன் இந்த விழிப்புணர்வு பிரச்சாரத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. துப்புரவு நிலவரங்களை மேம்படுத்துவதில் மக்கள் தங்களின் வெற்றிக் கதைகளை சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொள்வதை ஊக்குவிக்கும் வகையில், இப்பிரச்சாரத்தின் போது, போட்டிகளும் நடத்தப்பட உள்ளன. தேசிய மனித உரிமைகள் தினமான, அடுத்த மாதம் 10 ஆம் தேதி இந்த இயக்கம் முடிவடையும்.

போலீஸ் அறிவியல் (13)

மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா இன்று குஜராத் மாநிலம் காந்தி நகரில், 50 ஆவது அகில இந்திய போலீஸ் அறிவியல் மாநாட்டை தொடங்கி வைத்தார். போலீஸ் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கழகமும், தேசிய ரக்ஷா சக்தி பல்கலைக்கழகமும் இணைந்து இம்மாநாட்டை நடத்தின. தொடங்க விழாவில் மத்திய உள்துறை அமைச்சர் பேசுகையில், கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் ஏற்பட்ட முக்கிய மாற்றங்களால் உலக அளவில் தாக்கம் ஏற்பட்ட அதே வேளை, காவல் துறையின் இயல்பு மற்றும் செயல்பாட்டிலும் மாற்றங்களுக்கு தேவை ஏற்பட்டதாக கூறினார். பிணக்கு அதிகம் உள்ள பகுதிகளில் வன்முறையை குறைப்பதில் இந்தியா கடந்த 10 ஆண்டுகளில் குறிப்பிடத் தகுந்த அளவில் வெற்றி பெற்றுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். ஜம்மு காஷ்மீர் மற்றும் வடகிழக்கு பிராந்தியங்களில் வன்முறை 70 சதவிகிதம் குறைந்து இருப்பதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

தேர்தல் (15)

மகராஷ்டிர மாநிலத்தில் அனைத்து 288 தொகுதிகளுக்கு ஒரே கட்டமாகவும், ஜார்கண்டில், 38 தொகுதிகளுக்கு, 2 ஆவது மற்றும் இறுதிக் கட்டமாகவும் நாளை நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலுக்கான அனைத்து ஏற்பாடுகளும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஜார்கண்டில் 1 கோடியே 23 லட்சம் வாக்காளர்கள் வாக்களிக்க ஏதுவாக 14 ஆயிரத்து 218 வாக்குச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. 600 கம்பெனி மத்திய இணை ராணுவப் படையினர் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ளனர். 2 ஆவது மற்றும் இறுதிக்கட்ட ஜார்கண்ட் சட்டமன்ற தேர்தலில் 55 பெண்கள் உட்பட மொத்தம் 528 வேட்பாளர்களின் அரசியல் எதிர்காலம் தீர்மானிக்கப்படும். மகராஷ்டிர சட்டமன்ற தேர்தலில் மொத்தம் 4 ஆயிரத்து 136 வேட்பாளர்கள், தேர்தல் களத்தில் உள்ளனர். மாநிலத்தில் இம்முறை வாக்குப்பதிவு சதவிகிதத்தை அதிகரிக்க தேர்தல் ஆணையம் பல்வேறு முன்முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. வாக்காளர் கல்வி மற்றும் விழிப்புணர்வுக்கான ஸ்வீப் திட்டத்தின் கீழ், பல்லூடகப் பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

அனைத்து கட்சி (6)

நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடருக்கு முன்பாக மத்திய அரசு வரும் 24 ஆம் தேதி, அனைத்து கட்சி கூட்டம் ஒன்றுக்கு அழைப்பு விடுத்துள்ளது. நாடாளுமன்ற இரு அவைகளிலும் அலுவல்கள் சுமுகமான முறையில் நடைபெறுவதை உறுதிப்படுத்துவதில், அரசு இக் கூட்டத்தின் போது, அனைத்து கட்சிகளின் ஆதரவை நாடும். நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத் தொடர் வரும் 25 ஆம் தேதி தொடங்கி, டிசம்பர் 20 ஆம் தேதி வரை நடைபெறும்.

இந்திராகாந்தி (17)

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி பிறந்த நாளான இன்று புதுச்சேரியில், இந்திராகாந்தி சதுக்கத்தில் உள்ள அன்னாரது திரு உருவ சிலைக்கு, துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு ரங்கசாமி, அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன், திரு ஜெயக்குமார், திரு சாய் சரவணன் குமார், அரசுக் கொறடா திரு ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு கே.எஸ்.பி ரமேஷ் ஆகியோர், அரசு சார்பில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். அதனை தொடர்ந்து தேசிய ஒருமைப்பாட்டு உறுதி மொழி எடுத்துக் கொள்ளப்பட்டது. அதனை தொடர்ந்து, காங்கிரஸ் சார்பில் முன்னாள் முதலமைச்சர் திரு நாராயணசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் திரு வைத்திலிங்கம், சட்டமன்ற உறுப்பினர் திரு வைத்தியநாதன் ஆகியோரும் இந்திராகாந்தி சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். காரைக்காலில், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில், அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இந்திராகாந்தியின் திரு உருவ படத்திற்கு, குடிமைப் பொருள் வழங்கு துறை அமைச்சர் திரு திருமுருகன் தலைமையில், மாவட்ட ஆட்சியர் திரு மணிகண்டன் முன்னிலையில், மலர்தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

உறுதிமொழி (6)

இன்று தேசிய ஒருமைப்பாட்டு தினத்தை ஒட்டி, புதுச்சேரி ராஜ்நிவாசில், அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி செய்து வைத்தார். தலைமை செயலகத்தில், தலைமை செயலர் டாக்டர் சரத் சவுகான் உறுதி மொழியை வாசிக்க, ஊழியர்கள் மற்றும் அதிகாரிகள் உறுதி மொழி எடுத்துக் கொண்டனர்.

திரைப்பட விழா(7)

55 ஆவது இந்திய சர்வதேச திரைப்பட விழா கோவாவில் நாளை தொடங்கி, வரும் 28 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது. 81 நாடுகளில் இருந்து 180 சர்வதேச திரைப்படங்கள் இவ்விழாவின் போது திரையிடப்படும். ஏ ஆர் ரகுமான், ஆர். மாதவன், ராகுல் ப்ரீத் சிங், பங்கஜ்கபூர் உள்ளிட்ட திரைத்துறை பிரபலங்கள் விழாவில் பங்கேற்க உள்ளனர். இவ்வாண்டு இந்திய சர்வதேச திரைப்பட விழாவில், ஆஸ்திரேலிய திரைப்படங்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தப்படுகிறது.

மின்சார வாகனம் (15)

மின்சார வாகனங்களுக்கு மாறுவதன் மூலம், புதைபடிவ எரி பொருள் மீது சார்ந்துள்ள நிலையை மாற்றி, கார்பன் புகை வெளியீட்டை குறைக்க இந்தியா முயன்று வருவதாக மத்திய கனரக தொழில்துறை அமைச்சர் திரு எச் டி குமாரசுவாமி கூறியுள்ளார். இன்று புதுடெல்லியில், இ-போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவது குறித்த தேசிய மாநாட்டில் உரையாற்றிய அவர், மின்சார வாகனங்களின் பயன்பாட்டை அரசு ஊக்குவித்து வருவதால், 2070 ஆம் ஆண்டிற்குள் நாட்டின் நிகர கார்பன் வெளியீட்டை பூஜ்யமாக குறைக்க ஏதுவாகும் என்றார். பிரதமர் அலுவலக ஆலோசகர் திரு தருண் கபூர் இந்நிகழ்ச்சியில் பேசுகையில், டீசல் வாகனங்களுக்கு பதிலாக முற்றிலும் மின்சார வாகனங்களை பயன்பாட்டில் கொண்டு வர அரசு முக்கியத்துவம் அளிப்பதாக தெரிவித்தார். நாட்டின் பல்வேறு நகரங்களில் பொது இடங்கள், அலுவலகங்கள் மற்றும் வாகன நிறுத்தும் இடங்களில் மின்சார வாகனங்களுக்கான சார்ஜிங் வசதிகளை உருவாக்குவதில், பிரதமரின் இ-டிரைவ் திட்டத்தினால் முதலீடுகள் அதிகரித்து வருவதாக அவர் மேலும் கூறினார்.

வானிலை (14)

தென்கிழக்கு வங்கக்கடலில் வரும் 23 ஆம் தேதி வாக்கில் காற்றழுத்த தாழ்வுப் பகுதி உருவாகக் கூடும் என்றும், இது, மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுப்பெறக் கூடும் என்றும் சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இன்று தென் தமிழகம் மற்றும் அதனை ஒட்டிய குமரிக் கடல் பகுதிகளின் மேல், வளிமண்டல கீழடுக்கு சுழற்சியும் நிலவுகிறது. இதன் காரணமாக, தமிழகத்திலும், புதுச்சேரி-காரைக்கால் பகுதிகளிலும் மேலும் சில நாட்களுக்கு மழை நீடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்றைய தினம், தஞ்சை, நாகை, திருவாரூர், மயிலாடுதுறை, நெல்லை, குமரி, தூத்துக்குடி உள்ளிட்ட மாவட்டங்களிலும், காரைக்கால் பகுதியிலும் ஓரிரு இடங்களில் கனமழைக்கு வாய்ப்பு இருப்பதாகவும், வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதற்கிடையே, கடந்த 24 மணி நேரத்தில், அதிகபட்சமாக நாகை மாவட்டம் வேதாரண்யத்தில் 10 செ.மீ மழை பதிவாகி உள்ளது. காரைக்காலில் 4 செ.மீ மழை பெய்துள்ளது.

கமாண்டர் மாநாடு (9)

இந்திய விமானப்படை கமாண்டர்களின் 3 நாள் மாநாடு தற்போது புதுடெல்லியில் நடைபெற்று வருகிறது. இன்றைய தினம் பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங், இம்மாநாட்டில் உரையாற்றினார். விமானப்படை தலைவர் ஏர் சீஃப் மார்ஷல் ஏ.பி சிங், முன்னிலை வகித்தார். இந்திய விமானப் படையின் செயல்பாட்டு தயார் நிலையை மறு ஆய்வு செய்ய, இம்மாநாட்டில் முக்கிய கவனம் செலுத்தப்படுகிறது. குறிப்பாக, வட இந்திய எல்லைப் பகுதிகளில் விமானப்படையின் குளிர்கால செயல்பாடுகள் குறித்து சிறப்பு விவாதங்கள் இடம் பெறுகின்றன. இம்மாநாடு நாளை முடிவடையும்.

தொழில்நுட்ப மாநாடு (14)

கர்நாடக முதலமைச்சர் திரு சித்தராமையா இன்று பெங்களூரில், ஆசியாவின் மிகப் பெரிய, 27 ஆவது பெங்களூர் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை துவக்கி வைத்தார். கணிப்பொறி மென்பொருள், உயிரி தொழில்நுட்பம் உள்ளிட்ட துறைகளில் பெங்களூர் உலக அளவில் அங்கீகாரம் பெற்றுள்ளதை அவர் சுட்டிக்காட்டினார். பெங்களூர், மைசூர் மற்றும் பெலகாவியில், உலக அளவிலான 3 புதுமையாக்க மையங்களும் அமைக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். மைசூர் அருகே சர்வதேச செமி கண்டக்டர் நிறுவனங்களுக்கான மின்னனு உற்பத்தி பூங்காக்களும் அமைக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார். கர்நாடக அரசின் நிபுணா திட்டத்தின் கீழ், 1 லட்சம் இளைஞர்களுக்கு அதிநவீன தொழில்நுட்பங்களில் பயிற்சி அளிப்பது தொடர்பாக, முன்னணி தகவல் தொழில்நுட்ப நிறுவனங்களுக்கும், வங்கி-நிதி மற்றும் காப்பீட்டு துறை நிறுவனங்களின் கூட்டமைப்பிற்கும் இடையே, புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தாகி உள்ளது.